## *DEPOSITION OF WITNESS*

## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM

## CC No.452/2015

## PW: 2

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு. அன்பழகன் | Taluk : | வலங்கைமான் |
| Father's Name : | திரு. தெட்சிணாமூர்த்தி | Calling : | LW |
| Village : | ஆவூர் | Age : | 54 |

Solemnly affirmed by Thiru.S.Allan Border, Bench Clerk Grade II in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 08th day of September 2025.

Signature of Witness.

(Accused Present. Assistant Public Prosecutor Grade-I Present. Defence counsel present)

முதல் விசாரணை :

நான் தற்போது கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி, வலங்கைமான் கிளையில் வங்கி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். 2013-ல் சம்பவ சமயத்தில் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி, தலைமையிடத்தில் கடன் மேலாளராக பணிபுரிந்து வந்தேன். 25.05.2013-ல் திருவிடைமருதூர் வட்டத்தில் கள மேலாளராக பணிபுரிந்த திரு. S.சுரேஷ் என்பவர் கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் முறைகேடு நடந்ததாக கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி செயல் ஆட்சியர் அவர்களுக்கு புகார் மனு அளித்தார். அந்த புகார் மனுவின் அடிப்படையில் வங்கியின் முதன்மை வருவாய் அலுவலர்/துணை பதிவாளர் அவர்கள் கும்பகோணம் சரக துணை பதிவாளர் அவர்களுக்கு ஏற்கனவே

கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் பிரிவு 82-ன்படி விசாரணை நடைப்பெற்று வருகிறது என்றும், அந்த விசாரணையில் கள அலுவலர் சுரேஷ் என்பவர் கொடுத்த புகாரினையும் இணைத்து விசாரணை செய்யவேண்டும் என்று கடிதம் அனுப்பினார். அந்த கடிதத்தில் நான் சான்றொப்பம் இட்டு அனுப்பினேன். என்னிடம் காட்டப்படும் 30.05.2013-ம் தேதியிட்ட கடிதத்தின் மேலாளர் என்ற இடத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 30.05.2013 தேதியிட்ட கடிதத்தின் அசல் அ.சா.ஆ.2 ஆக ஏற்கனவே CC No.433/2015 ல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :

கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் பிரிவு 82-ன்படி நடைப்பெற்று கொண்டிருந்த விசாரணை குறித்து விபரமோ, அறிக்கையோ என்னிடம் அனுப்பப்படவில்லை என்றால் சரிதான். நான் எதிரிக்கு எதிரான ஆவணங்கள் மற்றும் வாக்குமூலங்கள் ஆகியவற்றை கருத்தில் கொள்ளாமல் உண்மைத்தன்மையை தெரிந்து கொள்ளாமல் கடிதத்தில் சான்றொப்பம் இட்டு அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him to be Correct.*

*Sd/S.Mahalakshmi,*
*Chief Judicial Magistrate,*
Thanjavur at Kumbakonam.